DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.200/2021**

Prosecution **PW.1**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | ராமன் | கிராமம் : | |
| தந்தை பெயர் : | பழனியப்பன் | வட்டம் : | |
| மதம் : | | தொழில்/ பணி : | |
| ஜாதி : | | வயது : | 84/2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.10.2024.
எதிரிஆஜர். வழக்கறிஞர் ஆஜரில்லை.

**முதல் விசாரணை**

1. எதிரியை நன்கு தெரியும். எனக்கு திருக்காம்புலியூர் கிராமத்தில் சொத்து உள்ளது. சர்வே எண். 110/3, 80/2, 81/5, 99/4 ஆகிய எண்களில் நிலம் உள்ளது. அதில் முதல் சர்வே எண் நன்செய் நிலம். மீதி உள்ள 3 நிலங்கள் புன்செய் நிலங்கள். நிலம் சம்பந்தமாக எனக்கும் எதிரிக்கும் என்ன பிரச்சினை என்றால் எதிரிக்கும் நிலத்திற்கும் சம்பந்தமில்லை. அவர் குத்தகைதாரர் என என்மீது வழக்கு தாக்கல் செய்தார். அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. வழக்கு குளித்தலை மாண்புமிகு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நடந்தது.

2. தென்னை மரத்திற்கு போட்டிருந்த வேலிக்கு நான் நெருப்பு வைத்ததாக சொல்லி போலீஸில் என் மீது புகார் கொடுத்ததாகவும், அதற்கு ரசீது கொடுத்ததாகவும் எதிரி சொன்னார். ஆனால் போலீசார் யாரும் என்னை விசாரிக்கவில்லை. வேறு எதாவது புகார் கொடுத்தாரா என்றால் 12.09.2012ம் தேதி அன்று மாயனூர் காவல் நிலையத்திலும், முதல் அமைச்சர் தனிபிரிவிலும் புகார் அளித்துள்ளார். போலீசார் என் வீட்டிற்கு வந்து என்னை அழைத்தார்கள். அப்போது மதியழகனும், குணசேகரனும் போலீசாரை கண்டதால் பதட்டப்பட்டு என்னுடன் வந்தார்கள்.

3. எதிரி என்ன புகார் கொடுத்தார் என்று பார்த்தேன். புகாரில் நான் தி.மு.க பிரமுகர். முன்னால் தி.மு.க. ஆளுங்கட்சி பிரமுகர் என்பதால் எல்லாரையும் மிரட்டி, மேலே சொன்ன நிலங்களையும், மற்ற நிலங்களையும் அபகரிக்க முயற்சி செய்வதாக சொல்லிருந்தார். எனது மகன் மணிகண்டன் வனதுறை அமைச்சரிடம் நேர்முக உதவியாளராக இருப்பதாகவும், அதை வைத்து அதிகாரிகளை மிரட்டினேன் என சொல்லியிருந்தார். சர்வே எண்.80/2 தேசிய நெடுஞ்சாலையில் ஒட்டி உள்ளது. அந்த நிலத்திற்கு நான் முறைகேடாக நஷ்ட ஈட்டு பணம் பெறகூடாது என சொல்லியிருந்தார்.

4. ஆனால் மேற்சொன்ன நிலத்திற்கு தேசிய நெடுஞ்சாலைதுறை நிலத்தை கையகப்படுத்தியதற்கு அனைத்து ஆவணங்களையும் சரிபார்த்து, நஷ்டஈடு என்னிடம் கொடுத்தார்கள். இக்குற்றச்சாட்டால் என் உடன் வந்தவர்கள், காவல்நிலையத்தில் இருந்த மற்றவர்களும் என்னை கீழ்தரமாக பார்த்தார்கள். இதை தவிர எதிரி அவரது வழக்கறிஞர் மூலம் திருச்சி தினமலர் நாளிதழில் என்னை பற்றி தவறான அறிவிப்பு ஒன்றை கொடுத்தார். அந்த அறிவிப்பில் வழக்கு நிலுவையில் உள்ளதாகவும், மேற்சொன்ன எனது நிலங்களை யாரும் வாங்க கூடாது எனவும் தெரிவித்திருந்தார். மற்ற விவரங்களும் மேற்சொன்ன அறிவிப்பில் தெரிவித்திருந்தார்.

5. மேற்சொன்ன வழக்கில் எதிரி குத்தகைதாரர் என்பதால் உறுத்துகட்டளை கோரியிருந்தார். நான் நிலத்தை விற்க கூடாது என பரிகாரம் கோரவில்லை. இந்த அறிவிப்பை பார்த்து தெரிந்தவர்கள், தெரியாதவர்கள், சொந்தகாரர்கள் என அனைவரும் என்னை வேறுமாதிரியாக பார்த்தார்கள். இதனால் மேற்சொன்ன நிலங்களை என்னால் விற்க முடியவில்லை. மேற்சொன்ன நிலம் பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரம் போலியான முத்திரை தாள்கள் பதிவு செய்யப்பட்டதாக கூறி எதிரி கரூர் மாவட்ட பதிவாளரிடம் புகார் அளித்தார். அப்புகாரின் மீது விசாரணை நடைபெற்றது. அவ்விசாரணையில் நான் கிரையம் பெற்ற முத்திரை தாள்கள் உண்மையானவை என முடிவானது.

6. அதன்பின்பு திருச்சி மண்டல பதிவாளருக்கு இதேபோன்று புகார் ஒன்றினை எதிரி கொடுத்து, அதன் மீதும் விசாரணை நடந்தது. அந்த விசாரணையிலும் நான் கிரையம் பெற்ற முத்திரை தாள்கள் உண்மையானவை என முடிவானது. இது குறித்தும் எனக்கு வேண்டியவர்களும், தெரிந்தவர்களும் என்னை தவறாக எண்ணி விசாரித்தார்கள். எதிரியின் மேற்சொன்ன

செய்கைகள் எனக்கு மிகப்பெரிய மன உளைச்சலையும், சமுதாயத்தில் அவமரியாதையையும் ஏற்படுத்தி உள்ளது.

7. நான் குளித்தலை வீட்டு வசதி கூட்டுறவு சங்கத்தில் துணை தலைவராக இருந்துள்ளேன். திருக்காம்புலியூர் கிராமத்தில் Village Head Man ஆக இருந்துள்ளேன். வருமான வரி செலுத்தி வருகிறேன். பொதுபணிதுறையில் நான் பதிவு பெற்ற ஒப்பந்ததாரராக இருந்தேன். கிருஷ்ணராயபுரம் அரசு மேல்நிலைபள்ளி மாணவர்களுக்கு புதிய காலணிகள் வாங்கி கொடுத்ததுடன் பல கைங்கரியங்களும் செய்துள்ளேன். மேலும் சுழற்கோப்பையும், உடைகளும் கொடுத்துள்ளேன். நான் எனக்கு ஏற்பட்ட மனஉளைச்சலுக்கும், அவமரியாதைக்கும் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன்.

8. அதை பெற்று கொண்டு எதிரி சம்பந்தமில்லாத பதில் அறிவிப்பு அனுப்பினார். எதிரியால் எனக்கு ஏற்பட்ட மானநஷ்டத்திற்கு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

| **ஆவண. எண்.** | **தேதி** | **ஆவணம்** | **ஆவணத்தின் தன்மை** |
|---|---|---|---|
| பு.சா.ஆ.1 | 14.05.2008 | கிரைய பத்திரம் | சான்றிட்ட நகல் |
| பு.சா.ஆ.2 | | 1422 மற்றும் 1423 பசலிக்கான அடங்கல் கணக்கு | சான்றிட்ட நகல் |
| பு.சா.ஆ.3 | | 1425 மற்றும் 1426 பசலிக்கான அடங்கல் கணக்கு | சான்றிட்ட நகல் |
| பு.சா.ஆ.4 | 12.09.2012 | எதிரி புகார்தாரர் மீது காவல் நிலையத்திலும், முதல்வர் தனிபிரிவிலும் கொடுத்த புகார் | உண்மை நகல் |
| பு.சா.ஆ.5 | 25.08.2008 | கிருஷ்ணராயபுரம் வட்டாட்சியர் கொடுத்த சான்று | நகல் |
| பு.சா.ஆ.6 | | புகார்தாரர் பெயரில் உள்ள பட்டா | சான்றிட்ட நகல் |
| பு.சா.ஆ.7 | 14.08.2007 | கிருஷ்ணராயபுரம் அரசு மேல்நிலைபள்ளி தலைமை ஆசிரியர் வழங்கிய சான்று | அசல் |

| | | | |
|---|---|---|---|
| பு.சா.ஆ.8 | 25.10.1999 | கிருஷ்ணராயபுரம் அரசு மேல்நிலைபள்ளி தலைமை ஆசிரியர் கொடுத்த சான்று | அசல் |
| பு.சா.ஆ.9 | 13.07.2013 | கிருஷ்ணராயபுரம் அரசு மேல்நிலைபள்ளி தலைமை ஆசிரியர் கொடுத்த சான்று | அசல் |
| பு.சா.ஆ.10 | 12.08.2013 | தினமலர் திருச்சி பதிப்பு பக்கம்.9 ல் வெளியான பொது அறிவிப்பு | அசல் |
| பு.சா.ஆ.11 | 25.08.2014 | புகார்தாரர் தகவல் அறியும் சட்டத்தின் கீழ் பெற்ற தகவல் | அசல் |
| பு.சா.ஆ.12 | 24.12.2013 | எதிரி கரூர் மாவட்ட பதிவாளருக்கு அனுப்பிய புகார் | நகல் |
| பு.சா.ஆ.13 | 01.04.2014 | மாவட்ட பதிவாளர் புகார்தாரருக்கு அனுப்பிய அறிவிப்பு | நகல் |
| பு.சா.ஆ.14 | 20.09.2013 | புகார்தாரர் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு | அலுவலக நகல் |

மனு படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/- M.Santhosham
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.